[2018 ஜூன் 6

ஏற்பாடு செய்கிறேன். அப்படி ஒரு முயற்சி இருக்குமென்று சொன்னால், அதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 138, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

138—

கால்நடை மருத்துவமனையைச் சீரமைத்தல்

***5579— டாக்டர் V.P.B. பரமசிவம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, எரியோட்டில் உள்ள கால்நடை மருத்துவமனையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட எரியோட்டில் செயல்பட்டு வந்த கால்நடை கிளை நிலையம், அரசாணை எண் 181, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 18-9-2017-ன்படி கால்நடை மருந்தகமாக, 10 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்பட்டு, 1-11-2017 முதல் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.

2018 ஜூன் 6]

டாக்டர் V.P.B. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பாக நெகிழி பைகளுக்கு நிரந்தரத் தடை விதித்து, தமிழர்களின் நெஞ்சம் நெகிழச் செய்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வாழ்த்த வயதின்றி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு உறுதுணையாக இருக்கின்ற அன்பும், பண்பும், பாசமும் நிறைந்த எங்கள் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 இலட்சம் ரூபாயிலே சிறப்பான முறையிலே அந்த மருந்தகத்தைத் தரம் உயர்த்தி, அந்தப் பகுதியிலே இருக்கின்ற கால்நடைகள் சிறப்பான முறையிலே சிகிச்சை பெறுவதற்கு உறுதுணையாக இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், அவரவர்கள் தொகுதியிலே இருக்கின்ற விவசாயிகளுடைய கோரிக்கையாக இன்று பல்வேறு கிளை மருந்தகங்களைத் தரம் உயர்த்துதல் போன்ற கோரிக்கைகளைக் கேட்கும்போதெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, அவற்றை தாயுள்ளத்தோடு வழங்கி, இன்று எண்ணற்ற கிளை மருந்தகங்களை இந்தத் துறை மூலமாக உருவாக்கி இருக்கிறது.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2012-ல் ஒரே அரசாணையில் 847 உதவி கால்நடை மருத்துவர்களுக்குப் பணி வழங்கி, Fodder Development Programme *மூலமாக கால்நடைகளுக்குத் தீவனங்களை உற்பத்தி செய்து இன்று வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.*

எங்களுடைய கேள்வி, இன்று இரண்டு அல்லது மூன்று கால்நடை மருந்தகங்களை ஒரே கால்நடை உதவி மருத்துவர் கண்காணிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதேபோல் Livestock Inspectors-*ம் குறைவாக இருக்கின்ற காரணத்தாலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பணியிடங்களை நிரப்ப முன்வருவாரா என்று தங்கள் வாயிலாக கேட்டு, அமர்கிறேன்.*

[2018 ஜூன் 6

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களது மாவட்டத்திற்கும், மற்ற பகுதிகளுக்கும் கால்நடை மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துறை ஆய்வின்போது அதையெல்லாம் கேட்டறிந்து, அதற்கான உத்தரவினைப் பிறப்பித்திருக்கிறார்கள் என்பதையும் கூடிய விரைவில் கால்நடை மருத்துவர் பணியிடங்களும், Livestock Inspectors பணியிடங்களும் நிரப்பப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.

டாக்டர் V.P.B. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தொகுதியில், வடமதுரை ஒன்றியம், சுக்காம்பட்டி ஊராட்சியில், வளவிசெட்டிப்பட்டி என்ற பகுதி 10 மலைக் கிராமங்கள் சூழ்ந்திருக்கின்ற பகுதி. 1,500-க்கும் அதிகமான கால்நடைகள் இருக்கின்ற அந்த வளவிசெட்டிப்பட்டி பகுதியில் புதிய கால்நடை கிளை மருந்தகம் ஒன்றினை அமைத்துத் தர வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறேன். பழனி, கொடைக்கானல், திண்டுக்கல் என்று 3 sub-divisions-ஆகப் பிரிக்கப்பட்டு, எங்களுடைய திண்டுக்கல் மாவட்டத்தில் ஓர் இணை இயக்குநர் தலைமையில் (Joint Director) 3 துணை இயக்குநர்கள் பணியாற்றி வருகிறார்கள். அதிலே, பழனி, கொடைக்கானல் இரண்டையும் சேர்த்து 6 வட்டாரங்கள், அதாவது பழனிக்கு 3 வட்டாரங்கள், கொடைக்கானலுக்கு 3 வட்டாரங்கள் என அவர்கள் பொறுப்பிலே இருக்கின்றன. ஆனால், திண்டுக்கல் Deputy Director-க்கு மட்டும் 8 வட்டாரங்கள் அவருடைய கண்காணிப்பிலே வருகின்றன. அதனால் வேலைப்பளு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், திண்டுக்கல்லிலிருந்து 3 அல்லது 4 வட்டாரங்களைப் பிரித்து, வேடசந்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு Deputy Director தலைமையில் ஒரு sub-division-ஐ உருவாக்கித் தந்தால், இந்தத்

2018 ஜூன் 6]

துறையினுடைய செயல்பாடுகள் சிறப்பாக இருக்கும் என்ற கோரிக்கையை வைத்து, அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்ய முன்வருவாரா என்று கேட்டு, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து உரிய கருத்துருவைப் பெற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, கூடிய விரைவில் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சண்முகம் அவர்கள்.*

திரு. அ. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து மறைந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காட்டிய நல்வழியில், எதற்கும் அஞ் சா சிங்கமாக, விவசாயிகளின் விடிவெள்ளியாக, குடிமராமத்துப் பணிகளை மேற்கொண்டு தமிழகத்தைப் பசுமையாக மாற்றி ஒளிரச் செய்த, தமிழக மக்களுக்கு காவேரி நீர் மேலாண்மை ஆணையத்தை அமைக்க போராடி வெற்றி பெற்றுத் தந்த, ஸ்டெர்லைட் ஆலையை மூட அரசாணை வெளியிட்ட, எளிமையான முறையில் சிறப்பான ஆட்சி நடத்திவரும் 'குடிமராமத்து நாயகர்' மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்திற்கும், அரசிற்கும் உறுதுணையாக நின்றுவரும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் கோவை மாவட்ட மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களைப் பெற்றுத் தந்து, எங்களுக்கு வழிகாட்டியாக இருக்கும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டை நடத்துவதற்கு எப்படி*

நிரந்தரமான அரசாணை பிறப்பிக்கப்பட்டதோ, அதேபோன்று, ரேக்ளா பந்தயத்தை நடத்துவதற்கு தற்போது PETA போன்ற அமைப்புகள் தடை செய்ய வலியுறுத்திக்கொண்டிருப்பதால், அந்த வீர விளையாட்டை, ஜல்லிக்கட்டைப் போன்றே நிரந்தரமாக நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று கேட்டு, அமர்கிறேன்.

மாண்புகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசைப் பொறுத்தவரை, ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி நடத்த வேண்டும் என்பதற்காக பல்வேறு வகைகளில் போராட்டம் நடத்தி இன்றைக்கு அதிக அளவில் ஜல்லிக்கட்டைப் பாதுகாப்பாக நடத்தி, இந்திய அரசாங்கத்தினுடைய பாராட்டுதல்களைப் பெற்றிருக்கிற மாநிலம் என்று சொன்னால், அது தமிழகம் என்கிற ஒரு வரலாற்றை நாம் படைத்திருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரேக்ளா பந்தயத்திற்கும் அதுபோன்று ஓர் அரசாணை வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். துறை ரீதியாக ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எடுத்துரைக்கப்படும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 139, மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

139—

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

***4972—திரு. தூசி கே. மோகன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யாறு தொகுதி, வெம்பாக்கத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?